சார்பு நீதிமன்றம், பெருந்துறை

MCOP No: 106/2020

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 நாள் Rw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன்படி திரு.அஷ்பக் அஹமது,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | ரம்யா |
| த.பெ/க.பெ | கே முத்துசாமி |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| வயது | 30 |

எம.சா. **1** நாள் **01.08.2025**

முதல் விசாரணை: (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)

நான் இம்மனுவின் 2 ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் உதவி சட்ட மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

1. காப்பீட்டு சான்று நிபந்தனைகளுடன் எமசாஆ 1
2. வாகனத்தின் கணிணி பதிவு சான்று விவரம் எமசாஆ 2

குறுக்கு விசாரணை ( மனுதாரர் தரப்பில்)

எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனம் commercial vehicle பேக்கேஜ் பாலிசி என்றால் ஆமாம். ஆவணங்கள் அடிப்படையில் மனுதாரர் காப்பீட்டு வாகனத்தில் பொருட்களை ஏற்றிக் கொண்டு அந்த வாகனத்தின் பின் பகுதியில் உட்கார்ந்து பயணம் செய்தார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் மனுதாரர் வீட்டை காலி செய்து பொருட்களை ஏற்றி செல்லும்போது

தான் விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆவணங்களில் அவ்வாறு தான் உள்ளது. எனது முதல் விசாரணையில் விபத்தில் மனுதாரர் நீங்கலாக வேறு யாருக்கும் காயம் ஏற்படவில்லை என சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். மனுதாரர் வாகனத்தில் எடுத்துச் சென்ற பொருட்களின் உரிமையாளர் என்ற நிலையில் வாகனத்தில் பயணம் செய்யயும்போது விபத்து ஏற்பட்டுள்ளதால் எங்கள் காப்பீட்டு நிறுவனம் தான் இழப்பீடு செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல, அவர் கேபினில் பயணம் செய்யவில்லை. எங்கள் எதிருரையில் கேபினில் பயணம் செய்தால் காப்பீடு பொருந்தும என்றும் வாகனங்கள் எடுத்துச் செல்லும் பொருட்கள் மீது பயணம் செய்தால் காப்பீடு செல்லாது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. பொருட்களின் உரிமையாளர் என்ற நிலையில் மனுதாரர் வாகனத்தில் பயணம் செய்தபோது விபத்து ஏற்பட்டுள்ளதால் எங்கள் காப்பீட்டு நிறுவனம் மனுதாரருக்கு நஷ்டஈடு செலுத்த பொறுப்புள்ளது என்றால் சரியல்ல. நஷ்டஈடு செலுத்துவதை தவிர்ப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED

Subordinate Judge,
Perundurai.

uploaded by